**சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

முன்னிலை: திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

**செயல்முறை ஆணை எண். 47591/டி3/2018 நாள். 20.05.2020**

பொருள்: நிர்வாகம் - தொழில் நுட்பக் கல்வித் துறை – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–IV 2015–2016, 2016-2017 & 2017-2018-ம் ஆண்டுகளுக்கு நடைபெற்ற தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்தவர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 1165/PSD-H1/2019, நாள் 18.02.2019
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.47591/டி3/2018 நாள் 26.02.2019

---

பார்வை (1)-ல் காணும் கடிதம் வாயிலாக, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பல்வேறு அலுவலகங்களில், இளநிலை உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டு, பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 TamilNadu Act No.14 of 2016, சட்டப்பிரிவு 28(1)-ன்கீழ், அவர்கள் பெயருக்கெதிரே கலம் 4–ல் குறிப்பிட்டுள்ள, அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | பெயர் / பதவி<br>திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | ஆ.சிவகுமார்,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 11.03.2019 மு.ப. |
| 2. | து.சத்யா,<br>இளநிலை உதவியாளர் | Faculty Training Centre,<br>அரசினர் பொறியியற் கல்லூரி,<br>கோவை | 11.03.2019 மு.ப. |
| 3. | கி.ஆனஸ்ட்ராஜ்,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 23.05.2019 மு.ப. |
| 4. | ம.ராஜா,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 13.03.2019 மு.ப. |
| 5. | கா.பார்கவி,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 08.03.2019 மு.ப. |
| 6. | ம.சகானாஸ்,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 07.03.2019 மு.ப. |
| 7. | ரா.புண்ணியகோட்டி,<br>இளநிலை உதவியாளர் | தந்தை பெரியார் அரசினர்<br>பொறியியற் கல்லூரி, வேலூர் | 11.03.2019 மு.ப. |

..2..

Scanned by PDF Scanner

| | | | |
|---|---|---|---|
| 8. | பெ.மு.அசோக் நந்தா,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 11.03.2019 மு.ப. |
| 9. | மெ.சரவணகுமார்,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 08.03.2019 மு.ப. |
| 10. | க.கனிச்செல்வம்,<br>இளநிலை உதவியாளர் | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை | 11.03.2019 மு.ப. |

மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்களின் முதுநிலை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்டு, பட்டியல் வரப்பெற்றபின், முதுநிலை குறித்த விவரம் தெரிவிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்கள், பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணி காலத்திற்குள், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டும். தகுதிகாண் பருவத்திற்குள், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை கட்டாயம் நிறைவு செய்ய வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 TamilNadu Act No.14 of 2016, சட்டப்பிரிவு 28(1)-ன்கீழ், மேற்படி இளநிலை உதவியாளர்கள், அவரவர் பணியில் சேர்ந்த நாள் முதல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு, பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகின்றன.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relating to Combined Civil Services Examinaion-IV for the year 2015-2016 2016-2017 and 2017-2018 recruitment".

ஒம்/– கே.விவேகானந்தன்
தொழில்நுட்ப கல்வி இயக்குநர்

பெறுநர்
மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்கள்
(சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர்கள் வாயிலாக)

நகல்:சம்பந்தப்பட்ட அலுவலகத்தலைவர்கள்
" :செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 6
" :இயக்குநரின் மேஜைக்கு
" :கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)
" :துணை இயக்குநர் (நிர்வாகம்) (பொ)
" :உதவி இயக்குநர்(நிர்வாகம்)
" :இயக்குநரின் நேர்முக உதவியாளர்
" :டி3 / இருப்புக்கோப்பு

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

1/6/2020
துணை இயக்குநர் (நிர்) (பொ)

1/6/2020.

Scanned by PDF Scanner